## DEPOSITION OF WITNESS

(ChapterXXIII Code of Criminal Procedure)

-----------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT,No.I, PERAMBALUR

**CC.No.45/2025**

**Date : 31.12.2025**

**PW1 ஹேமாவதி**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

செயல் அலுவலராக இந்து அறநிலை துறையில் எத்தனை வருடங்களாக பணி செய்து வருகிறேன்என்றால் 12 வருடங்களாக பணிசெய்து வருகிறேன். வட்டாச்சியர் அவர்களுக்கு அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அதிகாரம் இல்லை என்று உங்களுக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகாரில் சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் புகாரில் நான் நேரம் குறிப்பிடவில்லை. நான்  சொல்கின்ற சம்பவம் 28.10.2024ம் தேதி நடைபெற்றதா என்றால் சரிதான். அன்றைய தேதியில் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. மேற்படி கோவில் வளாகத்தில் சம்பவம் நட்ந்த சமயத்தில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 100 பேர் இருந்திருப்பார்கள்.

மேற்படி புகாரில் எதிரிகள் என்னை எந்த கெட்ட வார்த்தை சொல்லி எந்த எதிரிகள் திட்டினார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் இல்லை. சம்பவ நடந்த சமயத்தில் டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர் மற்ற போலீஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். மேற்படி சம்பவம் நடந்த சமயத்தில் போலீஸ் அதிகாரிகளிடம் புகார் அளித்தேன் என்றால் அளித்தேன். மேற்படி கோவில் பூஜை வரைமுறை, வழிபாட்டு முறைகள் மற்றும் சாமி கும்பிடுவது  பற்றி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கோவில் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி தேம்பாடி அம்மன் கோவில் சம்பவம் நடந்த தேதியில் காலை 11.30 மணி அளவில் காப்பு கழற்றிவிட்டார்கள் என்றால் சரிதான்.

பூஜை மற்றும் சாமி கும்பிடும் வழிமுறைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் மாற்றி அமைக்க இந்து அறநிலை துறை அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். மேற்படி தேம்பாடி அம்மன் கோவிலுக்கு ஒருமுறை காப்பு கழற்றிவிட்டால் தேங்காய் உடைத்து பூஜை செய்வது பழக்க வழக்கம் அல்ல என்றால் சரிதான். போலீஸார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. தேம்பாடி அம்மன் கோவில்வரைமுறை மீறி காப்பு கழற்றியபிறகு தேங்காய் உடைத்து பூஜை செய்ய கோரி பூசாரி மற்றும் கோவில் முக்கியஸ்தரிடம் கட்டாயப்படுத்தியதால் அவர்கள் மறுத்ததை மனத்தில் வைத்துக்கொண்டு பூசாரி , கோவில் முக்கியஸ்தர்கள் மற்றும் அவர்களுக்கு வேண்டப்பட்டவர்கள் மீது பொய்யான புகார் அளித்தீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.